லிருந்து பனைகளைப் பாதுகாப்பதற்கு நம்முடைய அரசு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்குமா? நம்முடைய அரசுக்குச் சொந்தமான காடுகளில் பனைகளைப் புதிதாக வளர்ப்பதற்கு ஏதாவது முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : பொதுவாக, இந்தப் பனங்கருப்பட்டி சர்க்கரை உற்பத்தி குறைந்து வருகிறதா என்பது பற்றி எனக்கு விவரம் இல்லை. இரண்டாவதாக, அப்படிக் குறைவதற்குக் காரணம், பனை மரங்கள் அழிக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். நான் ஏற்கனவே கொடுத்த விடையின்படி, 40 கோடி பனை மரங்கள் இருக்க, நாம் இப்பொழுது 40 லட்சம் பனைமரங்களைத் தான் இதற்காகப் பயன்படுத்துகிறோம். ஆகவே, இன்னும் ஏராளமான பனைமரங்கள் பயன்படுத்தப்படாமலேயே இருந்து கொண்டிருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலும், மற்ற இடங்களிலும், பனை மரங்களை உற்பத்தி செய்து, பயன்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் வருமானால் நிச்சயமாக அவை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னால் தள்ளிவைக்கப்பட்ட வினா எண் 154 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Quality control in rice mills

*** 154 Q.—Thiru S. RAMACHANDRAN :** Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken by the Government for enforcing quality controls in rice mills ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The licencees authorised to run rice mills in the State should take adequate precautions to see that the rice or paddy is kept in good condition. The percentage of polish that can be given to rice is also fixed as 3 to 5 per cent. The Government have employed technical staff who check the quality of the rice delivered to Government and also effect cuts under the provisions of the Madras Paddy and Rice (Maximum Prices) Control Order wherever the refractions exceed the prescribed limits. This ensures proper quality of the rice produced in the rice mills.

திரு எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கடைகளில் கிடைக்கக்கூடிய அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது என்ற புகார் தொடர்ந்து, அடிக்கடி, வந்து கொண்டே இருக்கிறது. அதற்குப் பிரதானமாக அரிசி மில் உடைமையாளர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். துர்நாற்றமுள்ள தண்ணீரைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தி, நெல்லை ஊற வைத்து, இன்னும் பல விதமான கலப் படங்களைச் செய்து, உற்பத்தி செய்யும் பழக்கம் வளர்ந்துவிட்டதால், இதைக் கண்காணிப்பதற்காகவாவது மில்களில் திடீர் விஜயம் செய்து, கண்காணிக்கக்கூடிய அதிகாரத்துடன் கூடிய, பொதுஜனக் கமிட்டி அமைத்து ஓரளவு சீர்செய்ய அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இதற்காக க்வாலிடி கண்ட்ரோல் நிறுவனம் ஒன்றை, இந்தப் புதிய அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, ஏற்படுத்தி, அது மிகத் தெளிவான முறையில் செயல்படுகிறது. பரிசோதனை நடத்துவதற்காக 82 தொழில் நுட்பப் பணியாளர்கள் (டெக்னிகல் அஸிஸ்டென்ட்ஸ்) நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த எந்த அரிசியெல்லாம் தரம் மோசமாக இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்வதற்காக, சென்னை, தஞ்சை, கடலூர் ஆகிய இடங்களில் லாபரடரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ரீஜனல் ஸ்டோரேஜ் ஆபீசர்கள்—உயர்தர அதிகாரிகள்—இருவர் நியமிக்கப்பட்டு, அவர்களில் ஒருவர் தஞ்சையிலும் இன்னொருவர்

சென்னையிலும் செயல்படுகிறார்கள். தஞ்சையில் இருக்கும் ரீஜினல் ஸ்டோரேஜ் ஆபீசரின் கீழ் ஒரு அசிஸ்டெண்ட் மார்க்கெட்டிங் ஆபீசரும், சென்னையில் இருக்கும் ரீஜினல் ஸ்டோரேஜ் ஆபீசரின் கீழ் இரண்டு அஸிஸ்டெண்ட் மார்க்கெட்டிங் ஆபீசர்கள் நியமிக்கப்பட்டு, ஒருவர் சென்னையிலும், இன்னொருவர் கடலூரிலும் செயல்படுகிறார்கள். 82 டெக்னிகல் அஸிஸ்டெண்ட்ஸ் இந்த மாநிலம் முழுதும் பரந்திருக்கிறார்கள். அவர்களுடைய வேலை—கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல—நெல் சரியாக உலர்ந்திருக்கிறதா, தண்ணீர்த் தொட்டியிலே போட்டிருக்கிறார்களா, அது உலருவதற்குப் போதுமான வசதி செய்யப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதும், தவறு நேருமானால், கலெக்டருடைய கவனத்திற்குக் கொண்டு வருவதும் அவர்களுடைய பணியாக இருந்து வருகிறது. இப்பொழுது சில புதிய முறைகளில் அரசாங்கம் மாறுதல் செய்திருக்கிறது. முன்பு மில்காரர்களிடம் கொடுத்து விடுவார்கள். அந்த நிலைமை இல்லாமல், கொடௌனிலே கொண்டுவந்து கொடுக்க வேண்டும், அதுவும் சர்டிபிகேட், இவைகளெல்லாம் கொடுத்ததற்குப் பிறகு தான் அதை வாங்கவேண்டும் என்ற புதிய அமைப்பும் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய உணவு வழங்குத் துறை,புதிய அரசு பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் நேரடியாக இயங்குகிறது. அஸிஸ்டெண்ட் கமிஷனர் அந்தஸ்தில், அவர் இயங்கி வருகிறார். க்வாலிடி கண்ட்ரோல் அதிகாரியாகவும் அவர் இயங்குகிறார். எல்லோரும் சேர்ந்து, அரிசியின் தரத்தைச் சரியாக அமைப்பதற்கும், அதை மீறுவார்களானால் அந்த ரைஸ் மில்காரர்களின் மீது வழக்குத் தொடருவதற்கும் கலெக்டருக்கு அதிகாரம் இருக்கிறது. நெடு நாளாக இருந்த ஒரு முறையை சீர்திருத்தும் முயற்சியில் அரசாங்கம் சிரத்தை கொண்டிருக்கிறது.

திரு எஸ். ராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தரக் கட்டுப்பாட்டை நிறைவேற்றாத குற்றத்திற்காக எத்தனை அரிசி ஆலைகள்சோதனையிடப் பட்டன ? எத்தனை அரிசி ஆலை அதிபர்களின்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது விஷயம்பற்றி தனிக் கேள்வி கேட்டிருக்க வேண்டும். தரக் கட்டுப்பாட்டைச் சோதனையிடுவதற்காக 82 டெக்னிகல் அஸிஸ்டெண்டுகள் இருக்கிறார்கள். இவர்கள் எந்த நேரத்திலும் அரிசி ஆலைகளைச் சோதனையிட்டு, அரிசி ஆலையில் எவ்வளவு நெல் இருக்கிறது, எவ்வளவு அரிசி இருக்கிறது, எவ்வளவு உமி இருக்கிறது, எவ்வளவு தவிடு இருக்கிறது, அரிசியின் தரம் எப்படியிருக்கிறது என்பவற்றை யெல்லாம் கண்டறிய வகை செய்யப்பட்டிருக்கிறது. அரிசி ஆலைகளில் ஒரு நாளில் நடைபெறுகின்ற எல்லா விவரங்களும் அங்குள்ள பதிவேட்டில் எழுதி வைக்க வேண்டும். இந்த "குவாலிடி கண்டிரோல்" அதிகாரிகள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் போய் அரிசி ஆலைகளைப் பார்க்கலாம். சரியான முறையில் இல்லாத அரிசி ஆலைகளின் லைசென்ஸ்களை ரத்து செய்வதற்கும், லைசென்ஸ்களை சஸ்பெண்டு செய்வதற்கும் இந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, மாவட்ட ரீதியாக டெக்னிக் அசிஸ்டெண்டுகளை நியமிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ? எங்கள் மாவட்டமான கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு அதிகாரியை நியமித்து, அங்கு வினியோகம் செய்கின்ற அரிசி தரமான முறையில் இருக்கிறதா என்று கண்டறிந்து, மக்களுக்குத் தரமான உணவுத் தானியங்கள் வினியோகம் செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : எங்கெங்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ அந்த அளவிலே இந்த "தரக்கட்டுப்பாடு அதிகாரிகள்" அமைப்பு துரிதமாகச் செயல்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த மாதிரியான முறைகேடுகள் மலிந்துவிட்டிருக்கின்றன என்ற புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல அரிசி ஆலைகளில்தான் இம்மாதிரியான

[1968 மார்ச் 6]

ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அறிவார்கள். இதைக் கண்காணிப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, கொள் முதல், வினியோகம், மேற்பார்வை இம்மூன்று வேலைகளும் ஒரே இலாகா வினால் செய்யப்படுகின்றன. இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவைகளைப் பிரித்துக் தனித்தனியாகக் கொடுத்துவிட்டால் நல்ல முறையில் மக்களுக்கு உதவ முடியும். இப்பொழுது மட்டமான, தரக் குறைவான அரிசி வருகிறது. நெல் கொள்முதல் செய்யும்போது எடை குறைவு, ஈரம், என்ற பல குறைபாடுகள் நடக்கின்றன. ஒவ்வொரு ஊரிலும் விவ சாயத் துறையில் இருக்கக் கூடிய அதிகாரிகளிடத்திலே இந்த வேலையை ஒப்படைக்கலாம். அவர்கள் தரக்கட்டுப்பாடு அதிகாரிகளாகப் பணியாற்ற லாம். இதை விட்டுவிட்டு, கொள்முதலையும், தரத்தையும் ஒரு இலாகாவி லுள்ள அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பதால் எந்த வேலையும் ஒழுங் காக நடைபெறாது. இதனால் பல ஒழுங்கீனங்கள் ஏற்படும். கொள்முதல் செய்வதற்கு விவசாய இலாகா அதிகாரிகள் இருக்க வேண்டும் என் பதை அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்பதற்கில்லை. இதை டெக்னிகல் அஸிஸ்டெண்டுகள் தான் பார்த்து வருகிறார்கள். இதை எப்படி வைத்தாலும் கடைசியில் கலெக்டர் அவர்களிடத்தில் போய்தான் முடியும். புதிய அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன் மக்களுக்கு நல்ல முறையில் உதவ வேண்டும் என்று எண்ணி வருகிறது. குறுவை அறுவடையில் கொஞ்சம் இந்த மாதிரி நேர்ந்துவிட்டது. அரிசி நன்றாக இல்லையென்பதைக் குறித்து பல மெம்பர்கள் இங்கே பேசினார்கள். நான் அதை ஒத்துக்கொள்கிறேன். குறுவைச் சாகுபடியில் அரிசி அப்படித்தான் இருக்கும். அடைமழை பெய்த நேரத்தில் 3 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தார்கள் அதைக் களத்துமேட்டிலிருந்து அந்த நெல்லை ஏழெட்டு கலெக்டர்களுடைய 300, 400 லாரிகள் மூலம் அரிசி ஆலைகளுக்கு துரிதமாகவே எடுத்துச்செல்லப் பட்டது. இது தற்காலிகமாக நடைபெறுவதுதான். மழைக்காலத்தில் நெல் சீக்கிரம் உலருவதில்லை. இந்த நிகழ்ச்சியில் மத்திய அரசைக்கூட குற்றம் சொல்ல வேண்டியிருக்கிறது. மத்திய அரசு 1 கோடி ரூபாய் அளவிலே டிரையர்கள் கொடுத்தார்கள். அதிலே ஐந்தாறு டிரையர்கள் வேலை செய்யவே இல்லை. இந்த மெக்கானிக்கல் டிரையர்ஸில் ஐந்தாறு தான் வேலை செய்தன. 24 மணி நேரமும், 300, 400 லாரிகள் வேலை செய்து, 2 லட்சம் டன் அரிசியை $1\frac{1}{2}$ மாத காலத்திற்குள் பல மாவட்டங் களுக்கு எடுத்துச்சென்றன. இது தற்காலிகமாக ஏற்பட்டதால் சிறிய குறைகள் இருக்கலாம். ஆனால் சம்பா பருவத்திற்கு வரக்கூடிய அரிசி நல்லதாக இருக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருக்கும் சேர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்ட பதிலளித்துவிட்டார் என்று கருதுகிறேன். அடுத்து திரு. சீமைச்சாமி.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மட்டமான அரிசி யைக் கண்காணிப்பதற்கு எத்தனை ஆட்கள் போட்டு கண்காணித்தாலும் சரிவர நடைபெறாது. ஆகவே, ஒரு யோசனையைச் சொல்ல விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே நேரம் அதிகமாக ஆகி விட்டது. பத்து மணிக்கு பிறகு, பொதுவிவாதத்தின் போது நீங்கள் அரசாங்கத்திற்கு யோசனையைத் தெரிவிக்கலாம். இப்போது தகவல் மட்டும் கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, புழுங்கல் அரிசியை அவிக்கிறதிலே, அரைப்பதிலே ஊழல் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். பச்சரிசியில் இந்தவிதக் கோளாறுகள் இல்லை. ஆகவே, புழுங்கல் அரிசிக்குப் பதிலாக, எல்லாவற்றையும் பச்சரிசியாக அரைத்துதர அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது சாப்பிடுபவர்களின் விருப்பத்தைப் பொறுத்த கேள்வி. நாம் தரமான அரிசியைக் கொடுக்க முடியும் என்பதில் அரசாங்கத்திற்கு இதயபூர்வமான நம்பிக்கை இருக்கிறது. இதனால் அரிசி மில்காரர்களுக்கு கொஞ்சம் கோபம் ஏற்படலாம். அரிசி மில்காரர்களின் கோபத்திற்காக அரசாங்கம் மக்களை மறந்துவிடாது என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்போது நெல்லை மாவட்டத்திலே அரிசியின் தரம் குறைந்ததாகவும், ஈரமுள்ளதாகவும் இருக்கிறது. மார்க்கெட்டிங் அஸிஸ்டென்டின் மேற்பார்வையில் தான் அரிசி போட வேண்டுமென்று விதி இருந்தபோதிலும் அப்படிச் செய்யப்படுவதில்லை. இப்பொழுது சில மில்களுக்கே அரிசிமில் லைசென்ஸ் இருப்பதால், தரத்தை உயர்த்த அரிசி மில் லைசென்ஸ் வேண்டுமென்று யார் கேட்டாலும் தாராளமாக அரசு அனுமதி வழங்க வேண்டும். அரிசியின் தரத்தை உயர்த்துவதற்காக அந்தந்த மாவட்டத்திலுள்ள அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை நிறுவ இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது தரத்தைப் பற்றிய கேள்வி. நவம்பர், டிசம்பர் மாதங்களில் எல்லா இடங்களிலும் அரிசி அப்படித்தான் இருக்கும். மழைக் காலத்தில் நெல் உலர வேண்டும். நெல்லை முதலிலே அரைப்பதற்கு முன்பு இயற்கையினோடு போராடி பிரமப்பிரயத்தனம் செய்து உலர வைக்க வேண்டியிருக்கிறது. அந்த முறையிலேதான் 3 லட்சம் டன் நெல்லை இந்த அரசாங்கம் அரைத்துத் தந்திருக்கிறது. இந்த மாதத்தில் எங்கு பார்த்தாலும் நல்ல அரிசியாக வரும். சம்பா பருவத்தில் அரிசி நன்றாக இருக்கும். எங்கேயாவது தவறுதல்கள் ஏற்பட்டால் அவற்றைக் கண்டிப்பதற்கு ஆங்காங்கே அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னமும் ஒரு துணைவினா கூட போடாத மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதலிடம் கொடுப்பதாக இருக்கிறேன். இப்போது திரு கோமதிசங்கர தீட்சிதர் கேள்வி போடுவார்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, தரக் குறைவான அரிசியை உபயோகப்படுத்துவதனால் மக்கள் உடல் நலம் கெடுகிறது என்பதை இந்த அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறதா? நெல்லை அரிசியாகக் கொடுப்பதில் சில ரகம் 68 சதவீதம் என்றும் சில ரகம் 70 சதவீதம் என்றும் கொடுக்க வேண்டும் என்று அரிசி மில்காரர்கள் வற்புறுத்தப்படுவதனால் நெல்லைத் தண்ணீரில் ஊறப்போட்டு தோலை உரித்துக் கொடுக்கிறார்கள் என்பதனால் தான் அரிசியின் தரம் கெடுகிறது என்பதை அரசாங்கம் உணர்கிறதா ? அப்படியின்றி நல்ல அரிசியாகக் கொடுக்க எந்த எந்த ரகத்திற்கு எவ்வளவு பர்செண்ட் அவுட்டேர்ன் வரும் என்று நியாயமாகக் கண்டறிந்து நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் அப்படியெல்லாம் பார்த்துத்தான் அவுட்டர்ன் நிர்ணயித்திருக்கிறது. அரிசி மில்காரர்களுடைய நீண்ட நாளைய சுபாவம் மாறவேண்டும். அவர்களுடைய ஒத்துழைப்பும் மக்களுடைய கண்காணிப்பும் இருந்தால் நிச்சயமாக நல்ல தரமான அரிசியைக் கொடுக்க சாத்தியக் கூறுகள் உண்டு.

திரு. நா. கிருட்டிணன் : தலைவர் அவர்களே, ஈரமான அரிசி தந்தால் கூடப் பரவாயில்லை. எங்கள் ஊரில் அரிசி தருகிற வியாபாரிகள் அதிக விலை பெறக் கருதி சிறுமணி அரிசியை வைகுண்டா அரிசி என்று கிடங்கில் வைத்துவிடுகிறார்கள். அப்படி மாற்றுச் செய்யாதிருக்க இந்த கொடவுன்களுக்கு தரங்களைப் பிரித்தறியக்கூடிய டெக்னிகல் அஸிஸ்டெண்டு களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, ரேஷன் இருக்கிற வரையில் அரிசியின் தரம் சீர்ப்படப் போவதில்லை என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இது கொள்கையைப் பற்றிய விவகாரம் ஆகும். இதுபற்றி பதில் அளிக்கத் தேவையில்லை.

திரு பெ. மலைச்சாமி : வருகிற ஏப்ரல் முதல் நாளிலிருந்து தனிப்பட்ட வர்களுக்கு அரிசி மில் வைக்க லைசென்சு வழங்குவதில்லை. கூட்டுறவுத் துறையில் தான் வழங்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தினிடம் இருந்து உத்தரவு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மத்திய அரசாங்கம் அப்படிப் பட்ட ஆணை ஒன்றும் கொடுக்கவில்லை. ஆனால் கூடுமான வரையில் அர சாங்கமே இதை நேரிடையான முறையில் நடத்துவதற்கான சாத்தியக்கூறு களைப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பர்னாண்டோ : அரிசியில் உண்டாகிற தரக் குறைவை நீக்குவதற்காக ரேஷனில் நெல்லாகவே கொடுக்கிற உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மீண்டும் நெல்லாகவே கொடுப்பதில் நெல் தரக்குறைவாக இருக்கிறது என்று சொல்லக் கூடும். எப்படி அரிசி தரம் கெடாது பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் தான் அரசு அக்கறையாக இருக்கிறது. நெருக்கடி நேரத்தில் ரேஷனில் நெல்லா கவே கொடுக்கிற சந்தர்ப்பங்களும் உண்டு.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது அரிசி மில் முதலாளிகள் தவறு செய்தால் அவர்களுடைய லைசென்ஸை ரத்து செய்துவிடுவது பற்றிச் சொன்னார்கள் அதோடு குறைந்த பட்சம் ஓர் ஆண்டுக் கடுங்காவல் தண்டனை கொடுக்கும் சட்டத்தைக் கொண்டுவர முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்போதுள்ள சட்டங்களை முறைப்படி நிறைவேற்றினாலேயே ஒழுங்கீனங்களை நல்ல முறையில் தடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

திரு. ப. மகாதேவன் : இலக்கியத்தில் வருகிற அன்னம் பாலில் இருந்து தண்ணீரைப் பிரித்துப் பாலைக் குடிக்கும் வன்மை பெற்றிருக் கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆனால் ரேஷன் கடைகளில் வழங்கும் அரிசியில் கலந்திருக்கும் நெல்லைப் பிரிப்பதே மக்களுக்கு மிகுந்த பாடாகப் போய்விடுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அதற்கு வேண்டிய டெக்னிகல் எக்ஸ்பர்ட்டைப் போட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது உண்மைக்கு முற்றிலும் மாறான கூற்றாகும். இது மாண்புமிகு உறுப்பினருடைய அரசியல் பிரச்சா ரம் ஆகும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதுரை மாவட்டத்தில் கொள் முதல் செய்கின்ற நெல்லை உடனடியாக அரிசி மில்களுக்கு அனுப்புகிறார் கள். அவர்கள் தங்களுடைய சொந்த லாபத்தைச் கருதி மக்களுக்கு மிகவும் மோசமான அரிசியைக் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, அந்த அந்தப் பகுதியில் உள்ள தனியார் ரைஸ் மில்களை சர்க்காரே எடுத்து நடத்துமா ? கூட்டுறவுத் துறையில் எடுத்து நடத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையின் அடிப்படையில் தான் 12 புதுமை அரிசி மில்களை அதுவும் 71 சதவீதம் அவுட்டர்ன் கொடுக்கக்கூடிய அரிசி மில்களைக் கூட்டுறவுத் துறையில் கொண்டுவருவதற்கு அரசாங்கமே திட்டமிட்டு அதற்கான வேலை கள் நடக்கின்றன.

திரு. சி. கே. சின்னராஜி : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி கொடுப்பது படிப்படி யாக அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்றார்கள். கோதுமை, மைதா வையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே ஏ. மதியழகன் : கோதுமை பற்றி நாம் பேசும் போது அதை எடுத்துக் கொள்ளலாம்.

பதுக்கல்காரர்கள் மீது வழக்குகள்

வினா *155—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) புதிய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எத்தனை பதுக்கல் காரர்கள், கள்ளச் சந்தையாளர்கள் மீது வழக்குகள் தொடர்ந்துள்ளது ?

(இ) எத்தனை வழக்குகள் வெற்றி பெற்றன ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN

Number of cases booked—	
Hoarding	763
Blackmarketing	66
Number of persons arrested—	
Hoarding	331
Blackmarketing	263
Number of cases prosecuted—	
Hoarding	61
Blackmarketing	52
Number of cases ended in conviction—	
Hoarding	29
Blackmarketing	11
Number of cases under investigation—	
Hoarding	274
Blackmarketing	14